## 152. உடைந்துபோன பாத்திரம்

பல்லவி

உடைந்துபோன பாத்திரம்
சிதைந்து போன பாத்திரம்
புதைந்து போன பாத்திரம் - நானே

அனுபல்லவி

என்ன நினைச்சிகிட்டிங்க
என்ன தேடிவந்திங்க
என்ன இழுத்து கொண்டிங்க - இயேசுவே

சரணங்கள்

1. வீட்டிலே உருப்பிடாத போனவன் என்று
பெத்தவங்க எனக்கு பேரு வெச்சங்க
உருப்பிடாத போனவன கையில் எடுத்தீர்
உமது உறுப்பாக மாற்றி விட்டிங்க
- என்ன நினைச்சி

2. கல்வியிலே புத்தியில்லா போனவனென்று
பள்ளியிலே வாத்தியாரு பேரு வெச்சாரு
புத்தியில்லா போனவன கையில் எடுத்தீர்
கல்விமானின் நாவை கொடுத்துவிட்டிங்க
- என்ன நினைச்சி

3. சமுதாயத்தில் பிரயோஜனமற்றவனென்று
ஜனங்க எல்லா எனக்கு பேரு வெச்சங்க
பிரயோஜனமற்றவன கையில் எடுத்தீர்
உமக்காக பயன்பட மாத்தி விட்டிங்க
- என்ன நினைச்சி

4. சபையிலே பின்மாறி போனவனென்று
சபையாரு எனக்கு பேரு வெச்சங்க
பின்மாறி போனவனை கையில் எடுத்தீர்
மற்றவர்கள மனமாற்றம் அடையசெய்திங்க

- என்ன நினைச்சி